முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1365

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.06.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மத்தின் காவலனே அரங்கா வாழ்க
தரணிகாக்க வந்தநல் தேசிகா வாழ்க
கர்மத்தை மக்களுக்கு உடைத்து இனிதே
கருணைகொண்ட ஞானிகளாய் மாற்ற வந்த
2. வந்தநல் ஆறுமுக அரங்கா வாழ்க
வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
பெருமைபட ஞான அறிவுரை ஆசி
புகலுவேன் சோபகிருது மிதுன திங்களில்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 10 ம் நாள், 25.06.2023, ஞாயிற்றுக்கிழமை)

3. திங்களிலே அரங்கன் மகா சக்தி
தெய்வ சக்தியாக உலகமெங்கும் பரவி
ஓங்காரம்பட இந்த பேருலகில்
உயர்வான ஞான சக்தியாக மாறி
4. மாறியே கலியுகத்தில் அனைவருக்கும்
மரணமில்லா பெருவாழ்வு சித்திக்க
ஆறுதலாய் மாதவபலனாய் இறங்கி நிற்கும்
ஆற்றல்பட அரங்கனுள் யானிருந்து அற்புதத்தை உலகமெங்கும் நடத்திவர
5. வருங்காலம் அரங்கன் தொண்டர்களாலே
வல்லமைமிக்க ஞானப் படைகளாக மாறி
தருகின்ற குணம் பெருகி உலகமெல்லாம்
அரும் கருணைநிறைந்த ஆட்சியாக
6. ஆறுமுகன் யான் ஆளுகின்ற ஞான
அறிவிப்பேன் பாதுகாப்பு மிக்கநல்
பெருமைகொண்ட உலகை தேற்றுகின்ற
புண்ணிய பலமிக்க ஆட்சியாக வெளிப்படும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—